தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 20.03.2023

# சென்னை கோட்டத்தில் 18 ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கையில் முன்னேற்றம் விவரம் தெரிவிக்க ரயில்வே அமைச்சருக்கு

## திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி

தென்னக ரயில்வேயில் சென்னை கோட்டத்தில் அமைந்துள்ள 18 ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தும் பணிகளில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவரம் தெரிவிக்குமாறு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**இதுகுறித்து மக்களவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் கடந்த 15-ம் தேதி எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

சென்னை கோட்டத்தில் அமைந்துள்ள 18 ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தும் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட 18 ரயில் நிலையங்கள் மட்டுமல்லாமல் அம்ரித் பாரத் ரயில் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேலும் பல ரயில் நிலையங்களை மேம்படுத்த ரயில்வே அமைச்சகம் திட்டமிட்டுள்ளதா? அவ்வாறு உத்தேசித்திருந்தால் அதுதொடர்பான விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையம் மற்றும் காட்பாடி ரயில் சந்திப்பு நிலையங்களை நவீனமயப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் திட்டத்தில் தற்போதைய நிலை, அப்பணிகள் தோராயமாக எப்போது முடியும் என்ற விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

சென்னையில் சைதாப்பேட்டை, கிண்டி, மாம்பலம் ரயில் நிலையங்களில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

வாணியம்பாடியில் வாகனங்கள் கடக்கும் ரயில்வே லெவல் கிராசிங்கை புதிதாக அமைக்கவும் மேம்படுத்தவும் (எல்சி-81) ஒன்றிய அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளது? அவ்வாறெனில் அக்கோரிக்கையை விரைவாக நிறைவேற்ற ரயில்வே நிர்வாகம் மேற்கொண்டுள்ள விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் கதிர் ஆனந்த் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில் விவரம்**

ரயில் நிலையங்களை மேம்படுத்துவதற்காக அம்ரித் பாரத் ரயில்நிலைய நவீனமயப்படுத்தும் திட்டம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. நீண்டகால அணுகுமுறையின் அடிப்படையில் தொடர்ந்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை ரயில்வே கோட்டத்தில் அமைந்துள்ள 20 ரயில் நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

எழும்பூர், காட்பாடி, தாம்பரம், சென்ட்ரல், ஆவடி, கடற்கரை நிலையம், திருவள்ளூர், அரக்கோணம், செங்கல்பட்டு, கிண்டி, பெரம்பூர், அம்பத்தூர், மாம்பலம், பூங்கா நகர், தோமையார் மலை, கூடுவாஞ்சேரி, திருத்தணி,

ஜோலார்பேட்டை, கும்மிடிப்பூண்டி, சூலூர்பேட்டை ஆகியவை இவற்றில் அடங்கும்.

நிதி ஒதுக்கீடு, ரயில்கள் இயக்க எண்ணிக்கை, மேம்பாட்டுப் பணிகள் முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ரயில் நிலையங்களில் நவீனமயப்படுத்தும் வேலைகள் நடைபெறும்.

எழும்பூர் மற்றும் காட்பாடி ரயில் நிலையங்களைப் பொருத்தவரை பணிகளுக்கான டெண்டர்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டன. பயணிகளின் பாதுகாப்பு, ரயில்கள் இயக்கத்தில் கவனம், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெறுவதில் உள்ள பல்வேறு தடைகள் ஆகியவற்றின் காரணமாக திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்ற இயலவில்லை. எனவே திட்டப் பணிகள் எப்போது நிறைவடையும் என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் கிண்டி மற்றும் மாம்பலம் ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. சைதாப்பேட்டை ரயில் நிலையத்தில் பயணிகள் போக்குவரத்தைப் பொருத்து அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

வாணியம்பாடியில் லெவல் கிராசிங் (எண் 81) ஏற்கெனவே உள்ளது. இதற்குப் பதிலாக ரயில்வே மேம்பாலம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் வழக்கு காரணமாக கடந்த 8-11-2015 அன்று பணிகள் நிறுத்தப்பட்டன. அணுகுமுறைச் சாலைக்கான நிலம் கையகப்படுத்துதல் பணியை தமிழ்நாடு அரசு முடித்த பிறகு ஆர்.ஓ.பி.க்கான மறுடெண்டர் விடப்படும்.

*****